www.newwisdomministries.com

கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்



08.05.2022

ஞானம் 5 – ஒலி 19



## ஆயிரம் இருந்தும்... வசதிகள் இருந்தும் ?



அருட்பணி.சைமன் பீட்டர்

# மகிழ்ந்திருக்கவே வாழ்வு... மகிழ வைக்கவே மனிதம் ...

ஞான ஒலி இணைய வார இதழின் மதிப்பிற்குரிய வாசக அன்பர்களே வணக்கம். நம் இதழின் இணைய மென்பதிப்பைப் பெற்று பயன் அடைவதோடு, இதன் ஒலிவடிவப் பதிவையும் கேட்டுப் பயன்பெறுங்கள். இவ்விதழின் கட்டுரையாளர்களின் குரலிலேயே அவர்களின் கருத்துக்களையும் படைப்புகளையும் கேட்க நமது விஸ்டம் மினிஸ்ட்ரீஸ் தமிழ்நாடு (wisdom ministries tamilnadu) என்ற முகவரிக்குச் சென்று பாருங்கள், கேளுங்கள். பயன் பெறுவதோடு அதை மற்ற உங்கள் அன்பாவருக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

**A mind all logic is like a knife all blade. it makes the hand bleed that uses it - Robinranath Tagore.**

என்று அவர் செல்வதில் ஆயிரம் அர்த்தங்கள் உண்டு என்பதை இதைப் படித்தவுடனே நீங்கள் அறிந்து கொள்வீர்கள். ஆமாம். உங்களுக்கு, எனக்கும் அதே போன்றுதான் தோன்றினாலும், உங்கள் கருத்துச் செறிவுக்கும், எனது கருத்துக்கும் பல வித்தியாசங்கள் உண்டு. ஏனென்றால் நாம் அனைவரும் தனித்தனியாள்கள், அதோடு பலவித பன்முகத்தன்மைகளும் கொண்டவர்கள்.

இந்தத் தலையங்கத்தின் வழியாக உங்களோடு என் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

ரவீந்தரநாத் தாகூர் அவர்கள் சொல்வது சரிதான். நாம் அனைவரும் பகுத்தறிவு கொண்ட, அதோடு எதையும் ஆய்ந்து பார்க்கும் பழக்கம் உடையவர்கள். புத்திவிபரம் அறியும்வரை, நம் உணர்வுகளின் கைப்பாவையாக இருக்கிறோம். நமது இதயம், உணர்வுகள் என்ன செய்யத் தூண்டுகிறதோ, அதன்படியே நாம் செய்வோம். ஏன் நாம் அதைச் செய்ய வேண்டும் என்று யோசிக்கவே மாட்டோம். ஆற்றில் அடித்துச் செல்லப்படும் சறுகைப்போல, எடுத்தார் கைப்பிள்ளையாக, இழுத்த இழுப்புக்கொல்லாம் அலைந்து கொண்டிருப்போம்.

ஆனால், புத்தி தெளிந்த பிறகு, வெகுளியாய், தத்தியாய் இருந்ததால்,

பலவித இன்னல்களுக்குப் பிறகு படாத பாடுபட்டு விவரம் தெரிந்த பிறகு, அனைத்தையும் அலசி ஆராய்ந்து, நிதானமாக, காரண காரியங்கள் அனைத்தையும் சிந்தித்து, பிறகே ஒரு முடிவுக்கு வருவோம். அந்த முடிவை நடைமுறைப்படுத்த ஆயிரம் முறை அதைச் செய்யலாமா? செய்யக்கூடாதா? என்று யோசித்துக் கொண்டேயிருப்போம்.

அளவுக்கதிகமாக தர்க்கம் பண்ண ஆரம்பித்துவிட்டால், யாராலும் சாதாரணமாக வாழவே முடியாது. அத்தகைய உணர்வோடு வாழப் பழகிவிட்டால்...

யாரைக் கண்டாலும் பயம், சந்தேகம், யாரோடவும் சகஜமாகப் பழக முடியாது. எப்போதும் ஒருவித பதட்டம் வந்துவிடும். அதனால் வலுக்கட்டாயமாக வந்துவிடும் தனிமை, விரக்தியைத் தரும். எல்லாவற்றையும் நாமே செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் வந்துவிடும். ஏனென்றால் யார் மீதும் நம்பிக்கை வராது. யாரும் இதை சரியாகச் செய்யமுடியாது என்னால்தான் இதைச் சிறப்பாகச் செய்யமுடியும் என்ற தலைக்கணம் வந்துவிடும்.

மனிதர்களின் பேச்சு, செயல் அனைத்தையும் ஒன்றுவிடாமல், ஏன், எதற்காக, சரியா? தவறா? என்று ஆராய ஆரம்பித்துவிடுவோம்.

இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருப்பவர்கள் எப்போதும், தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்வார்கள்.

மற்றவரைவிட அதிகமாக படித்தால், தெரிந்திருந்தால், அவர்கள் தனிமையாகத்தான் இருப்பார்கள் என்ற சொல்லாடல் உண்மையாகத்தான் இருக்கிறது.

அப்படிப்பட்டவர்கள் சதாகாலமும் மனஅழுத்தங்களோடு, எதையோ இழந்ததைப் போலவே இருப்பார்கள். மகிழ்ச்சியற்ற ஒரு விரக்தி அவர்களுக்கு வந்துவிடும். சரியான தூக்கம் இருக்காது. சரியாகவும சாப்பிடவும் முடியாது.

மனக்கவலை மனிதனின் வாழ்வை நரகமாக்கிவிடும். காரணம் அவர்கள் மனிதர்களோடு வாழவிரும்பாததும், தங்களை மற்றவர்களைவிட உயர்ந்தவர்கள், என்ற உயர்வு மனப்பான்மையும்தான்.

அப்படிப்பட்ட ஓர் அரசன் எல்லா மக்களையும் தான்தான் வாழ வைப்பதாகவும், அனைவருக்கும் தானே கடவுள் என்றும் எண்ணிக் கொண்டிருந்தான். இருந்தாலும் அவனுக்குள் ஏதோ இனம்புரியாத கவலை, பயம், விரக்தியும், மனஅழுத்தமும், மனச் சோர்வும் அவனது வெல்வச் செழிப்பைப் போலவே அவனுடனே எப்போதும் வளரந்து கொண்டேயிருந்தது. அவனுக்கு எல்லாம் இருந்தும் அவன் மகிழ்ச்சியற்றவனாக இருந்து வந்தான். யாரோடவும் பேச விரும்பவில்லை, மற்றவரும் அவனுடம் நெருங்கிப் பழகவும் விரும்பவில்லை. அவன் வாழ்வில் விரக்கதியடைந்து வாழ விருப்பமின்றி யாருமே இல்லாத ஒரு மலைக்கு ஓடிவிடலாம் என்றிருந்தான்.

ஒருநாள், அவன் தன் அரண்மனையைவிட்டு யாருக்கும் தெரியாமல் வெளியேறி,, அந்த நாட்டின் எல்லையில் இருக்கும் ஒரு மலைக்குச் சென்றுவிடலாம் என்ற நோக்கத்தோடு போய்க்கொண்டிருக்கும்போது, மலையடிவாரத்தில் ஒரு மரத்தின் கீழ் வயது முதிர்ந்த முனிவர் ஒருவர் தியானம் செய்து கொண்டிருந்தார்.

அப்போது அந்த அரசன் அந்தத் துறவியை சந்தித்துவிட்டு செல்லலாம்

என்று அவரை வணங்கி நின்றான். அப்போது அந்த துறவி உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு அந்த அரசன், துறவியே, நான்தான் இந்த நாட்டு அரசன். நான்தான் மக்கள் அனைவரையும் காப்பாற்றி வருகிறேன். நான் அவர்களுக்கு எந்தக் குறையையும் வைக்கவில்லை. நான் இந்த நாட்டை மிகச் சிறப்பாக ஆண்டு வருகின்றேன். இந்த நாடு பாதுகாப்பாய் இருப்பதே என்னால்தான். ஆனால் நான் மகிழ்ச்சியாக இல்லை. எல்லாம் வெறுத்துவிட்டது. என் மனத்தில் ஏதோ ஒன்று அழுத்திக் கொண்டேயிருக்கின்றது. வாழ்க்கையே வெறுத்துவிட்டது. எங்காவது கண்காணாத இடத்திற்கு ஓடிவிடலாம் என்று இங்கு வந்துள்ளேன். நான் என்ன செய்வது என்று தெரியவில்லை. நீங்கள்தான் எனக்கு உதவி செய்ய வேண்டும் என்றான்.

அதற்கு அந்தத் துறவி. சரி அப்படியென்றால் உனது நாட்டையும், உன் அரச பதவியையும் எனக்குக் கொடுத்துவிடு. என்றார் துறவி. அதற்கு அந்த அரசன் ஓ, சந்தோஷமாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னான்.

அதற்கு அந்தத் துறவி, உன் நாட்டை எனக்குக் கொடுத்துவிட்டு நீ என்ன செய்யப் போகிறாய் என்று கேட்டார். அந்த அரசன், நான் எங்காவது சென்று கூலி வேலை செய்து பிழைத்துக் கொள்வேன், எனக்கு நிம்மதி வேண்டும் என்றானாம். அதற்கு அந்தத் துறவி, அப்படியானால் நானே உனக்கு ஒரு வேலை தருகின்றேன். உனக்குத் தெரிந்த வேலை நாட்டை ஆட்சி செய்வது. ஆகவே எனக்குப் பதிலாக நீ இந்த நாட்டை ஆட்சி செய். உனக்குரிய சம்பளத்தை நான் தருகின்றேன்.

இன்று முதல் இந்த நாடு என்னுடையது. அரசன் என்ற வேலையை நான் உனக்குத் தருகின்றேன். நான் அங்கு வரும்போது உன் கணக்கு வழக்குகளை என்னிடம் காண்பி என்று சொல்லி அனுப்பினார்.

பல காலத்திற்குப் பிறகு அந்த முனிவர் அந்த அரசனிடம் சென்றபோது அந்த அரசன் கணக்கு வழக்குகளை அவரிடம் காண்பித்தான். அதற்கு அந்தத் துறவி...அதைப் பிறகு பார்த்துக் கொள்கிறேன்.

இப்போது நீ எப்படி இருக்கிறாய்? என்று கேட்டார். அதற்கு அந்த அரசன், நான் இப்போது மிகவும் மகிழ்ச்சியாகவும், மன நிம்மதியோடும் இருக்கிறேன் என்றான் அரசன்.

அதற்கு அந்தத் துறவு, நீ முதலில் அனைத்தையும உன் தலைமேல் ஏற்றி வைத்துக் கொண்டு, நீதான் கடவுள் என்றும், அனைத்தும் உன்னால் தான் வாழ்கிறது என்று நினைத்துக் கொண்டாய். இப்போது அனைத்தும் எனக்குரியது என்றும் நீ வெறும் எனது வேலைக்காரன், அனைத்தையும் பராமரிக்கும் வேலையை மட்டுமே செய்வதாக நினைத்து எந்தவிதக் கவலையும் இன்றி வாழ்கின்றாய் என்றார்.

நான் என்ற எண்ணம் அதிகமாகின்ற போது, தலைக்கனமும், தனது உயர்நிலையைக் காக்க வேண்டிய பயமும், பரபரப்பும் வந்துவிடும். அனைத்தும் தன்னால்தான் முடியும், அனைவரும் தனக்குக் கீழ்தான் என்ற எண்ணம் ஒருவித மாயத்தோற்றம்தான்.

இந்தப் பிரபஞ்சத்தில் நாம் ஒரு துகளே. ஆனால் அந்தத் துகளும் மிகமிக முக்கியம். ஆகவேதான் அது படைக்கப்பட்டுள்ளது. இதுவே இந்தப் படைப்பின் மகத்துவம் என்று இறைவன் நினைக்கின்றார். இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள எண்ணற்ற துகள்களோடு ஒவ்வொரு துகளும் எவ்வாறு இணைந்து நேர்மறையோடு வாழ்கின்றதோ அப்போதுதான் அந்தத் துகளின் மகத்துவம் மிளர ஆரம்பிக்கும்.



# விவிலியம் அறிவோம் - 47

## கனவுகளை விளக்கும் யோசேப்பு

யோசேப்பு பார்வோனின் அரச சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது ஆண்டவர் அவருடன் இருந்ததால் சிறை மேலாளரின் தயை அவருக்குக் கிடைத்தது என நாம் ஏற்கனவே பார்த்தோம். சிறை மேலாளர் அவரைச் சிறைக்கைதிகளைக் கண்காணிப்பவராக நியமிக்கின்றார். அப்போது இரண்டு முக்கியமான அரசகைதிகள் சிறையில் இருந்தனர். அவர்களில் ஒருவர் மன்னனுக்கு மது பரிமாறுபவர்களின் தலைவன். மது பரிமாறுவோரின் தலைவன் அரச சபையில் உயர்நிலையில் உள்ள ஒருஅதிகாரி (காண் நெகேமி 1:11). அவர் நம்பிக்கைக் குரியவராகவும் நேர்மையாளராகவும் இருக்கவேண்டும். அவருடைய முதன்மைப் பணி என்னவென்றால் மன்னனின் உண்ணும் உணவு மற்றும் அருந்தும் பானங்கள் அனைத்தையும் முதலில் சுவைக்க வேண்டும்; மன்னனின் உணவிலும் பானத்திலும் யாரும் நஞ்சு கலந்துவிடாமல் கண்காணிக்க வேண்டும். இன்னொருவர் மன்னனுக்கு அப்பம் தயாரிப்பவர்களின் தலைவன். இவரும் அரசசபையில் உயர்நிலையில் உள்ள ஒரு அதிகாரி. இருவரும் மன்னனுக்கு எதிராகச் செயல்பட்டதாக சிறையில் அடைக்கப் பட்டிருந்தனர். இவர்கள் பார்வோனுக்கு எதிராகச் செய்தக் குற்றங்கள் குறிப்பிடப்பட வில்லை. அவர்கள் பார்வோனுக்கு எதிராகச் சதிசெய்தார்களா? தங்கள் பணியைச் செய்யும்போது பார்வோன் விரும்பாதவிதத்தில் செயல்பட்டார்களா என்பது தெரியவில்லை. அவர்கள் விசாரணைக்காக காத்திருக் கிறார்கள்.

யோசேப்பும் அந்தச் சிறையில்தான் அடைக்கப்பட்டிருந்தார். சிறைமேலாளர் அவர்கள் இருவரையும் கண்காணிக்கும் பொறுப்பையும் யோசேப்பிடம் ஒப்படைக்கின்றார். அவர்கள் நீண்ட நாள்களாக சிறையில் இருந்தனர். ஒருநாள் இரவில் இருவரும் கனவு காண்கின்றனர். வேறுவேறு கனவுகள்; ஆனால் கனவின் பொருள் அவர்களுக்குப் புரியவில்லை. அவர்கள் கவலைகொள்கின்றனர்; கனவின் பொருளை அறிந்துகொள்ளத் துடிக்கின்றனர். யோசேப்பு இருவரும்; கவலையாக இருப்பதைக் கவனிக்கிறார். அவர்களின் கவலைக்கு காரணம் கேட்கிறார். அவர்கள், நாங்கள் இருவரும் கனவு கண்டோம்; அதை எங்களுக்கு விளக்கிச் சொல்வார் யாருமில்லை என்கின்றனர். யோசேப்பு அவர்களின் கனவுகளை விளக்கிச் சொல்ல முன்வருகிறார். அவர்களின் கனவுகளை விவரமாகச் சொல்லக் கேட்கிறார். அவர்களும் தாங்கள் கண்ட கனவுகளைக் கூறுகின்றனர். இருவரின் கனவுகளும் மூன்று என்ற எண்ணை மையமாகக் கொண்டிருந்தன. மூன்று என்ற எண் விவிலியத்தில் முழுமையைக் குறிக்கும் எண். ஆனால் மது பரிமாறுவோரின் தலைவனும், அப்பம் தயாரிப்பவர்களின் தலைவனும் கண்ட கனவுகளில் வருகின்ற மூன்று என்ற எண் மூன்று நாள்களைக் குறிப்பதாக உள்ளது. மூன்று நாட்களுக்குள் அவர்களின் கனவுகள் நிறைவேறும். பண்டையகாலத்தில் எண் கணிதம் நீதிநெறி இலக்கியத்துடன் தொடர்டையதாக இருந்தது. யோசேப்பு கனவுகளை விளக்கும் திறன் கொண்டவராக இருப்பது கடவுளின் கொடையான ஞானம் அவருக்கு இருப்பதை வெளிப்படுத்துகிறது.


மது பரிமாறுவோரின் தலைவனின் கனவு அரண்மனையில் அவருடைய பதவியைக் குறிப்பதாக உள்ளது. யோசேப்பு மது பரிமாறுவோரின் தலைவர் கண்ட கனவை விளக்கிக் கூறுகிறார். அதன்படி மூன்று நாள்களில் அவர் சிறையிலிருந்து விடுவிக்கப்படுவார்; பழைய



பதவியில் மீண்டும் அமர்த்தப்படுவார். கனவை விளக்கிக் கூறிய யோசேப்பு அவரிடம் உதவி கேட்கிறார். அவர் மீண்டும் பதவியில் அமர்த்தப்படும்போது, யோசேப்பை நினைவு கூர்ந்து,அவரைச் சிறையிலிருந்து விடுவிக்க பார்வோனிடம் கூறி முயற்சிக்க வேண்டுகிறார். அப்பம் தாயரிப்போரின் தலைவரின் கனவும் அவரது பதவியுடன் தொடர்புடையதாகவே உள்ளது. யோசேப்பு அதற்கும் விளக்கமளிக்கிறார். அப்பம் தயாரிப்போரின் தலைவரின் கனவு அவரது முடிவைக் குறிப்பதாக உள்ளது. மூன்று நாள்களில் அவர் பார்வோனால் கழுமரத்தில் ஏற்றப்படுவார். இரண்டு கனவுகளுக்கும் யோசேப்பு அளித்த விளக்கம் அப்படியே நிறைவேறுகிறது. மூன்று நாள்களுக்குப் பின் பார்வோனின் பிறந்தநாள் வருகிறது. அன்று அரச அலுவலர் அனைவருக்கும் பார்வோன் விருந்து அளிக்கிறான். அந்த நாளில் சிறையில் இருந்த மது பரிமாறுவோரின் தலைவர் மற்றும் அப்பம் தயாரிப்போரின் தலைவர் இருவரும் விசாரிக்கப்படுகின்றனர். அவர்களில் மது பரிமாறுவோரின் தலைவனை முன்னைய பதவிக்கு உயர்த்துகிறார் பார்வோன். அப்பம் தயாரிப்போரின் தலைவரைப் பார்வோன் கழுமரத்தில் ஏற்றுகிறார். இவ்வாறு யோசேப்பு அவர்களின் கனவுகளுக்கு கொடுத்த விளக்கம் நிறைவேறுகிறது.

கனவுகளை விளக்கும் ஆற்றல் யோசேப்பிற்கு இருந்தது அவருக்குப் பெரும் துணையாக இருக்கிறது. நாள்கள் நகர்கின்றன. ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்குப் பின் பார்வோன் ஒரு கனவு காண்கிறார். அந்தக் கனவு அவரை வதைக்கிறது. அவருடைய கனவில் பலமுக்கியமான கூறுகளைக் காணமுடிகிறது. மக்கள் தங்கள் வாழ்க்கைக்காக சார்ந்திருக்கும் நைல்நதி மற்றும் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் உதவுகின்ற பசுக்கள் போன்றவை பார்வோனின் கனவில் தெரிகின்றன. ஏழு என்ற எண்ணும் அந்தக் கனவின் ஒரு கூறாக உள்ளது. ஏழு முழுமையைக் குறிக்கும் எண். கனவில் ஏழு கொழுத்த பசுக்களை ஏழு மெலிந்த பசுக்கள் விழுங்கிவிடுகின்றன. பார்வோன் காணுகின்ற இரண்டாவது கனவும் அதே கருத்தைத்தான் குறிப்பிடுகின்றது. இந்தக் கனவிலும் செழுமையான,முற்றிய ஏழு கதிர்களை தீய்ந்த ஏழு கதிர்கள் விழுங்குதல், எண் ஏழு ஆகிய கூறுகள் உள்ளன. பார்வோன் தனது நாட்டில் உள்ள மந்திரவாதிகளையும், ஞானிகளையும் அழைத்து விளக்கம் கேட்கிறார். அவர்களால் அந்தக் கனவுகளை விளக்க முடியவில்லை. மது பரிமாறுவோரின் தலைவர் இப்போது யோசேப்பை நினைவு கூருகிறார். தான் சிறையில் இருந்தபோது கண்ட கனவுக்கு யோசேப்பு விளக்கம் கூறியதையும் அது அப்படியே நிறைவேறியதையும், யோசேப்பு தன்னைச் சிறையிலிருந்து விடுவிக்க பார்வோனிடம் பரிந்துபேசக் கேட்டதையும் நினைவு கூர்கிறார். உடனே பார்வோனிடம் யோசேப்பைப் பற்றிக் கூறுகிறார்.

நிகழ்வுகள் வேகமாக நடக்கின்றன. யோசேப்பு பார்வோனிடம் அழைத்துவரப்படுகிறார். யோசேப்பு தன்னிடம் அழைத்துவரப்பட்டதன்





காரணத்தை பார்வோன் அவரிடம் கூறி, தான் கண்ட கனவுகளுக்கு விளக்கம் கேட்கின்றார். யோசேப்பு நானல்ல, கடவுளே பார்வோனுக்கு நலமிகு மறுமொழி வழங்குவார் எனக் கூறுகின்றார். கடவுள்தான் தன் வழியாகச் செயல்படுகிறார் என்பதை யோசேப்பு எப்போதும் உணர்ந்தவராகவே செயல்பட்டார். பார்வோன் தனது கனவுகளை யோசேப்பிடம் கூறுகிறார். தனது கவலைக்கான காரணத்தையும் வெளிப்படுத்துகிறார். உதாரணமாக, நலிந்து, மெலிந்த பசுக்களைப் பற்றிக் கூறும்போது, அத்தகைய அருவருப்பான பசுக்களை எகிப்து நாட்டில் நான் எங்கும் எப்போதும் கண்டதில்லை (41:19) எனக் கூறுகின்றார். யோசேப்பு பார்வோன் கண்ட கனவுகளை விளக்கிக் கூறுகிறார். அடுத்து வருகின்ற பதினான்கு ஆண்டுகளுக்கான கடவுளின் திட்டத்தை கடவுளே கனவுகளின் வழியாக வெளிப்படுத்துகிறார். முதலில் வருகின்ற ஏழு வருடங்கள் செழுமையான வருடங்களாக இருக்கும்; அடுத்து வருகின்ற ஏழு வருடங்கள் கொடிய பஞ்சத்தைக் கொண்டு வருகின்ற ஆண்டுகளாக இருக்கும். இது கடவுளின் வெளிப்பாடு என்பதை யோசேப்பு தெளிவாகக் கூறுகிறார். இந்தச் சூழ்நிலையை எதிர்கொள்வதற்கு யோசேப்பு பார்வோனுக்கு ஒரு தெளிவான திட்டத்தையும் தருகிறார். அதன்படி, பார்வோன் உடனடியாக மதிநுட்பமும் ஞானமும் செறிந்த ஒருவனைக் கண்டுபிடித்து எகிப்து நாட்டின் அதிகாரியாக அமர்த்தவேண்டும். ஏழு வளமான ஆண்டுகளில் எகிப்து நாட்டின் விளைச்சலில் ஐந்திலொரு பகுதியைக் கொள்முதல் செய்யுமாறு மேற்பார்வையாளர்களையும் பார்வோன் தொடர்ந்து நியமிக்க வேண்டும். வரவிருக்கும் வளமான இந்த ஆண்டுகளிலேயே, தானியம் முழுவதையும் பார்வோனின் அதிகாரத்தில் அவர்கள் கொள்முதல் செய்து, பின்னர் உண்ணக் கொடுப்பதற்கென நகர்களில் சேமித்து வைக்கவேண்டும். எகிப்து நாட்டில் பஞ்சம் வரவிருக்கும் ஏழாண்டுகளில் பயன்படுத்துமாறு தானியம் இவ்வாறு சேமித்துவைக்கப்பட்டால் நாடு பஞ்சத்தினால் அழியாதிருக்கும் என தனது திட்டத்தைத் தெளிவாகக் கூறுகிறார்.

யோசேப்பின் மதிநுட்பம் நிறைந்த யோசனை பார்வோனை ஈர்க்கிறது. பார்வோனின் அலுவலர்களுக்கும் யோசேப்பின் திட்டம் நலமானதாகத் தோன்றுகிறது. பார்வோனின் பார்வையில் யோசேப்பு உயர்ந்து நிற்கிறார். யோசேப்பு கூறிய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அவரைவிட சிறந்த ஒருவர் கிடைப்பது கடினம் என பார்வோன் நினைக்கிறார். எனவே தனது அலுவலர்களை நோக்கி, இறையாவி பெற்றுள்ள இவரைப் போல் வேறெவரையும் நாம் காணமுடியுமோ? எனக் கூறுகின்றார் அதன்பின் பார்வோன் யோசேப்பை நோக்கி, இவற்றையெல்லாம் கடவுள் உம் ஒருவருக்கே அறிவித்துள்ளார். உம்மைவிட மதிநுட்பமும் ஞானமும் செறிந்தவர் யாருமிலர்.எனவே,நீரே என் அரண்மனையின் பொறுப்பை ஏற்பீர். உம் வார்த்தைக்கு என் மக்கள் எல்லோரும் அடிபணியட்டும். அரியணையில் மட்டும் நான் உமக்கு மேற்பட்டவனாய் இருப்பேன் எனக் கூறுகின்றார். பார்வோனின் வார்த்தைகள் அவர் யோசேப்பின் கடவுள் மீது நம்பிக்கை வைத்துச் செயல்படுவதைக் காட்டுகிறது. எகிப்தியக் கடவுள்களின் உதவியை அவர் தேடவில்லை. மாறாக யோசேப்பின் வழியாக எகிப்தின் சூழ்நிலையை வெளிப்படுத்திய ஆண்டவர் எகிப்தை கவனித்துக் கொள்வார் என நம்புகின்றார்.



எனவே யேஸசேப்வை நோக்கி, இதோ! எகிப்து நாடு முழுவதற்கும் உம்மை அதிகாரியாக நியமிக்கிறேன் எனக் கூறுகின்றார். பார்வோன் யோசேப்பை அதிகாரியாக நியமிப்பதற்கு, அரசகணையாழி, பட்டாடை மற்றும் பொன் கழுத்தணி ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. இந்த மூன்று பொருள்களும் பார்வோனால் நியமிக்கப்பட்ட அரசஅதிகாரி என்பதற்கான அடையாளங்களாக உள்ளன. இந்த அடையாளங்கள் யூதா மற்றும் தாமார் கதையையும் நமக்கு நினைவுபடுத்துகின்றது. அக்கதையில் யூதாவின் அடையாளங்களாக அவரது முத்திரை மோதிரம், இடைவார் மற்றும் கைத்தடி ஆகியவை உள்ளன. யோசேப்பின் பதவியேற்பு சடங்கில் இன்னுமொரு முக்கிய நிகழ்வும் நடக்கிறது. பார்வோன் யோசேப்பை, தன் இரண்டாம் தேரில் வலம் வரச் செய்து இவருக்கு முழந்தாளிடுங்கள் என்று ஏவலர் கட்டியம் கூறச் செய்கிறார். இந்தச் சடங்கின் வழியாக யோசேப்பு எகிப்து நாடு முழுவதற்கும் அதிகாரியாக நியமிக்கப்படுகிறார்; எகிப்தில் பார்வோனுக்கு அடுத்த நிலைக்கு உயர்த்தப்படுகிறார்.

யோசேப்பின் நிலையைக் குறித்துக் காட்டுவதற்கு பார்வோன் இன்னும் இரண்டு செயல்களைச் செய்கிறார். முதலில் யோசேப்பின் பெயரை மாற்றுகிறார். அவருக்கு சாபனாத்துபனேகா எனப் பெயர் சூட்டுகிறார். இரண்டாவதாக,ஓன் நகர் அர்ச்சகர் போற்றிபெராவின் மகளான ஆசினத்தை அவருக்கு மணமுடித்து வைக்கிறார். இச்செயல்களின் வழியாக யோசேப்பு ஒரு எகிப்தியனாகவே மாற்றப்படுகிறார். அதன் மூலம் எகிப்து நாடு முழுவதற்கும் யோசேப்பு ஆளுநர் ஆகிறார். யேஸசேப்பிற்கு அப்போது வயது முப்பது. யோசேப்பு உடனே தனது பணியைத் தொடங்குகிறார். நாடு முழுவதும் பயணம் செய்கிறார். முதல் ஏழாண்டுகளில் எகிப்து நாட்டில் விளைந்த எல்லா உணவுப் பொருள்களையும் நகர்களில் சேகரித்துவைக்கின்றார். ஒவ்வொரு நகரிலும் அதைச் சுற்றியுள்ள வயல்களில் விளைந்த உணவுப் பொருள்களைச் சேமித்து வைத்தார். கடற்கரை மணல் அளவுக்கு மிகுதியான தானியத்தை யோசேப்பு கொணர்ந்து குவித்தார் என விவிலியம் கூறுகிறது. இந்த ஏழு ஆண்டுகளில் யோசேப்பிற்கு ஆசினத்து மூலம் இரண்டு மைந்தர்களும் பிறக்கின்றனர். அவரது தலைமகன் பெயர் மனாசே. இரண்டாவது புதல்வனின் பெயர் எப்ராயிம். யோசேப்பின் வாழ்வில் நடந்த நிகழ்வுகளை நினைவு கூரும்விதத்தில் அவரது புதல்வர்களுக்கு இப்பெயர்கள் சூட்டப்படுகின்றன. யோசேப்பின் முன்மதியான செயலால் பஞ்ச ஆண்டுகள் வந்தபோது எகிப்து நாடு முழுவதற்கும் உணவு கிடைத்தது. மக்கள் பார்வோனிடம் வந்து உணவுக்காக ஓலமிட்டபோது பார்வோன் அவர்களிடம் யோசேப்பிடம் செல்லுங்கள்; அவர் சொல்வதைச் செய்யுங்கள் எனக் கூறுகிறார். யோசேப்பு களஞ்சியங்களைத் திறந்து, எகிப்தியர்களுக்குத் தானியங்களை விற்கத் தொடங்குகிறார். எகிப்தியர்கள் மட்டுமல்ல பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட வெளிநாட்டினரும் தானியம் வாங்க எகிப்திற்கு வருகின்றனர்.ஆண்டவரில் நம்பிக்கை கொண்ட யோசேப்பு அவரது உதவியால் அனைவரின் மதிப்பிற்குரியவராகிறார்.

பயணம் தொடரும்,
**அருட்பணி ஆ. அலெக்ஸ் CMF**







# மறையுரை


அருட்பணி. **லூயிஸ் பிரிட்டோ**

இயக்குனர், கலைக்காவிரி
நுண்கலை கலைக்கல்லூரி
திருச்சி மறைமாவட்டம்


**பொதுக்காலம்**

**16-ம் ஞாயிறு**

**17-07-2022**

**தொ.நூ. 18 : 1-10 / கொலோ. 1 : 24-28 / லூக். 10 : 38 - 42**

இயேசுவில் அன்பான சகோதர சகோதரிகளே, இன்று பொதுக் காலத்தின் 16ஆம் ஞாயிற்றுக்கிழமை வழிபாட்டைக் கொண்டாடுகிறோம்.

**மையச் செய்தி:**

**இறை பாதம் அமர்ந்து அவரது வார்த்தையைக் கேட்டு அதன்படி வாழ்வோம்.**

இன்றைய நவீன உலகில் பலரும் பரபரப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பிறருடைய குரலுக்கு செவிமடுப்பதற்கு நம்மில் பலருக்கும் நேரமில்லை. அதேபோல, இறை பிரசன்னத்தில் அமர்ந்து செபிப்பதற்கும் நமக்கு நேரமில்லை. நான் எப்பொழுதும் வேலையாய் இருக்கிறேன் என்று பலரும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். அதற்கேற்றார் போல முகநூல், கைப்பேசி, சமூக ஊடகங்கள் மற்றும் விளையாட்டுக்கள் நம்மை எப்பொழுதுமே பரபரப்பாகவே வைத்திருக்கின்றன. அமைதியாக அமர்ந்து கடவுளுடைய வார்த்தைக்கு செவிமடுக்க நம்மில் பலரும் முன் வருவதில்லை. இத்தகைய சூழலில் கடவுள் நமக்கு செபத்தின் வல்லமையை, முக்கியத்துவத்தை உணர்த்துவதாக இன்றைய வாசகங்கள் அமைந்திருக்கின்றன.

**1. ஆபிரகாமின் நம்பிக்கை 5 படிகளில்.**

இன்றைய முதல் வாசகத்தில் ஆபிரகாம் தனது நம்பிக்கையை 5 படிகளில் நமக்கு வெளிப்படுத்துகிறார். முதலில் இறைவனைக் காண்கிறார். இரண்டாவது அவர்களை தன் இல்லத்துக்கு அழைத்து வருகிறார். மூன்றாவது, அவர்களை உபசரிக்கிறார். நான்காவது, அவர்கள் கூறிய வார்த்தையைக் கேட்கிறார். ஐந்தாவது, வார்த்தையை நம்புகிறார். போலந்து நாட்டிலே ஒரு பழமொழி உண்டு ( Guest at home is God at home) அதாவது, இல்லத்துக்கு வந்திருக்கும் விருந்தினர் கடவுளுக்கு சமமானவர்கள் என்று. ஆபிரகாம் தன் இல்லத்துக்கு வந்த இறையடியாரை கண்டுணர்ந்து அவர்களை உபசரித்ததுடன் அல்லாமல் அவர்கள் கூறிய வார்த்தையைக் கேட்டு அது நிறைவேறும் என்று நம்பினார். அது அவருக்கு அப்படியே நிகழ்ந்தது. நாமும் ஆபிரகாமைப் போல கடவுளைக் கண்டுணர்ந்து அவரை நம் உள்ளத்துக்குள்ளே அழைத்து வந்து அவருக்கு உபசரிப்பு செய்து அவர் வார்த்தையைக் கேட்டு நம்பினால் நாமும் கடவுளுடைய அருளை அதிகமாக அடையலாமே!!!

**2. நற்கருணை சந்திப்பு**

போப் ஆண்டவர் புனித இரண்டாம் ஜான்பால் ஒரு நாளைக்கு குறைந்தது 50 முறை நற்கருணையை சந்திப்பார். அதேபோல திருப்பலி நிறைவேற்றுவதற்கு முன்பாக ஒரு மணி நேரம் முழங்கால் படியிட்டு செபிப்பார். அன்னை தெரசா ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேர ஆராதனைக்கு பின்புதான் தன்னுடைய பணிகளை ஆற்றியிருக்கிறார். புனித தொன்போஸ்கோ கூறுவார்‘ நாம் அடிக்கடி நற்கருணையை சந்தித்தால் சாத்தான் நம்மை விட்டு ஓடி விடுவான்‘ என்று. இவ்வாறு,புனிதர்கள் பலரும் நற்கருணை ஆண்டவரிடத்திலே பற்றுதல் கொண்டு இறை பிரசன்னத்தில் அமர்ந்து செபித்திருக்கிறார்கள்.

எனவே, அன்பானவர்களே செபம் தான் நமது வல்லமை. செபமே நமது ஆயுதம். நற்கருணை முன்பாக தினசரி அமர்ந்து இறை பிரசன்னத்தை உணர்வோம். இறை வார்த்தையைக் கேட்போம். அதன்படி நடந்து ஆபிரகாமைப் போல மரியாளைப் போல நமது நம்பிக்கையை அறிக்கையிடுவோம். இறுதியாக, புனித Padre Pio அவர்களுடைய பொன்மொழியோடு இந்த மறையுரையை நிறைவு செய்கிறேன். "Pray, Hope and Don't worry " - St. Padre Pio

ஆமென்.



# பொதுக்காலத்தின் 16-ம் ஞாயிறு

தொ.நூ. : 18:1-10, கொலோ. 1:24-28, லூக். 10:38-42

**17-07-2022**

## திருப்பலி முன்னுரை




**பா. சேவியர்**
பட்டாபிராம், சென்னை.


இறை வேண்டலும் செயலும் வாழ்வின் இரு கண்கள் என்பதை உணர்ந்து வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் பொதுக் காலத்தின் 16-ஆம் ஞாயிறு வழிபாட் டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

செயல், செபம் என்ற இரு பண்புகளை மையமாகக் கொண்ட இன்றையத் திருப்பலி, உபசரிப்பது முதன்மையா? உடனிருப்பது முழுமையா? என்ற கேள்விகளை முன்னெழுப்பி நம்மை சிந்திக்க அழைக்கிறது.

மரியாவை செப வாழ்வுக்கும், மார்த்தாவை செயல் வாழ்வுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக காட்சிபடுத்து கிறது இன்றைய நற்செய்தி.

வாழ்விலே செபம் , செயல் இரண்டுமே முக்கியமானது. செபமில்லாத செயல் வேரில்லாத மரம். செயலில்லாத செபம் கனி தராத மரம். செபமும் செயலும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்பதை உணர்ந்து இவ்விரண்டிற்கும் நம் வாழ்வில் இடமளிக்கவும், ஆண்ட வரோடு உடனிருந்து நல்ல பங்கை தேர்ந்துகொள்ளவும் இன்றைய வழிபாடு கற்றுத்தருகிறது.

நமது வாழ்க்கை அன்புப் பணியிலும் அர்ப்பண செபத்திலும் அடங்கி இருக்கிறது என்பதை முழுமையாக உணர்வோம். செபத்தையும், செயலை யும் நம் வாழ்வின் இரு கண்களாகக் கருதி, மரியாவைப் போல் இயேசுவின் வார்த்தைகளுக்கு செவி கொடுப்பவர் களாகவும், மார்த்தாவைப் போல் பணி விடை புரிபவர்களாகவும் வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப் போம்.

மனிதன் அப்பத்தினால் மட்டுமல், இறைவனின் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும், செயலி னாலும் உயிர் வாழ்கிறான் என்பதை உணர்ந்து ஆண்டவர் எத்துணை இனிமையானவர் என்பதை சுவைத்து மகிழ்வோம்.

## முதல் வாசக முன்னுரை

இஸ்ரயேல் குல முதல்வரும், விசுவாசத்தின் தந்தையுமான ஆபிரகாமின் விருந்தோம் பலை இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக் கிறது. தன் வாசல் தேடி மூன்று மனிதர்கள் வந்திருந்தாலும் ஆபிரகாம் அவர்களை ஒருமையில்தான் அழைக்கிறார். இது தமத்திருத்துவத்தின் முன் அடையாளம். மகிழ்வுடன் விருந்து அளிப்பவரை ஆண்டவர் அருளால், ஆவியால் நிரப்புகிறார் எனப்தை விளக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

வேதனை, துன்பம், துயரம் இவை யாவும் நம் வாழ்வோடு இணைந்த ஒன்றாகும். அன்றாடம் நாம் அனுபவிக்கும் வேதனைகள் வழியாக நாம் கிறிஸ்துவின் வேதனைகளில் பங்கேற்கிறோம் என்பதை இன்றைய இரண்டாம் வாசகம் எடுத்து ரைக்கிறது. முதிர்ச்சி நிலையை அடைய நமக்கு உறுதுணையாக இருப்பவை செயலும், மன்றாட்டுமே என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்திற்கு செவி மடுப்போம்.

## மன்றாட்டுகள்

1) நம்பிக்கை அளிப்பவராம் இறைவா, உம் திரு அவையை வழி நடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள் மற்றும் அருட் பணியாளர்கள் அனைவரும் தங்களை அன்புப் பணியிலும், அர்ப்பண செபத்திலும் அர்ப்பணித்து வாழ அவர்களுக்கு தேவையான ஆற்றலையும், ஆரோக்கி யத்தையும் நிறைவாக தந்து, உம்மோடு ஒன்றித்து நல்ல பங்கை தேர்ந்து கொண்டு வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) நல்ல நண்பரான இயேசுவே, மார்த்தாவின் அறியாமையை அவருக்கு அன்புடன் சுட்டிக்காட்டியதுபோல், எங்களின் அறியாமையையும், குறைகாணும் மன நிலையையும் சுட்டிக்காட்டியருளும். இதனால் சரியான பாதையில் பயணிக்கும் ஆற்றலை உம் தூய ஆவியால் பெற்று வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) கருணையும் இரக்கமும் கொண்ட இறைவா, ஆபிரகாம் சாரா இருவரும் தங்களிடமுள்ள மீதியஸனவற்றை கொடுக்காமல், தங்களிடமுள்ள சிறந்த வற்றை படைத்ததுபோல், நீர் எம்மீது பொழியும் அன்பையும், இரக்கத்தையும், எம்மிடம் உள்ளவைகளையும் மற்றவர் களோடு பகிர்ந்து, உமது சாட்சிகளாய் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) மார்த்தா – மரியா – இலாசர் வீட்டிற்குச் சென்ற இயேசுவே, இத்திருப்பலியில் உம்மை உண்டு வீடு திரும்பும் எங்களை உமது ஆசீரால் நிரப்பியருளும். எங்கள் இல்லங்களில் நீரே விருந்தினராய் வந்து எம்மோடு கலந்துறவாடி எங்கள் கவலை களைப்போக்கி கண்ணீரைத் துடைத்து எம்மை களிப்படையச் செய்ய வேண்டுமாய் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5) நீதியின் தெய்வமே இறைவா, எம் நாட்டை ஆளும் தலைவர்கள், சுயநலம் பாராது, மக்கள் நலனில் அக்கறை கொண்ட வர்களாகவும், வேலை வாய்ப்புள்ள சிறந்த செயல்திட்டங்களை பயனுள்ள வகையில் நிறைவேற்றிடவும், அடிப்படை வாழ்வாதா ரங்களை தேவையில் உழலும் மாந்தர் களுக்கு அமைத்துக் கொடுத்திடவும் கல்வி, பண்பாட்டில் நாட்டை நல்வழியில் கொண்டு செல்லவும் கூடிய ஞானத்தை பொதுநல மனதினைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## திரு.வி.க.வின் கிறிஸ்துவின் அருள் வேட்டல்



**அன்பினால் யாக்கைஏற்ற ஐயனே! போற்றி போற்றி**
**மன்பதை பாவம் தீர்க்க மரித்தவா ! போற்றி போற்றி**
**இன்புற உயிர்த்தெ ழுந்த ஈசனே! போற்றி போற்றி**
**என்பிழை பொறுக்கும் ஏசு எந்தையே! போற்றி போற்றி**

மக்கள் மீது கொண்ட அன்பினால் மனித உடலெடுத்து வந்த மேலேனே! வணக்கம், வாழ்க. உயிர்களையுடைய மக்களின் குற்றங்களை நீங்க சிலவையில் மரணத்தை ஏற்றவா! வணக்கம், வாழ்க. மக்கள் பேரின்பம் பெற உயிர்த்தெழுந்த இறைவனே! வணக்கம் வாழ்க, என் குற்றங்களை மன்னித்துப் பொறுத்துக்கொள்ளும் எம் தந்தையே! வணக்கம், வாழ்க.

யாக்கை – உடல், மன்பதை – மக்கள், எந்தை – எம் தந்தை.



# வத்திக்கான் செய்திகள்

நமது திருத்தந்தை அவர்கள் உடல்நிலை காரணமாக மிக விரைவில் தனது பதவியை ராஜினாமா செய்வார் என்ற வதந்திக்கு அவர் முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக, ஜீலை மாதம் 4ம் தேதியன்று வத்திக்கானின் மூத்த பத்திரிக்கையாளரும், செய்தித் தொடர்பாளருமான திரு பிலிப் புலெல்லா-விற்கு பேட்டி கொடுத்தபோது. தான் ராஜினாமா செய்யப்போவதாக வலம் வரும் வதந்தியில் உண்மையில்லை. அதே வேளையில் வரும் காலத்தில் என்னால் என் பணிகளை முழுமையாகச் செய்ய முடியாத நிலை வரும்போது, நிச்சயமாக நான் பதவி விலகுவேன். அது குறித்து கடவுளே எனக்கு வெளிப்படுத்துவார். ஆனால், அந்தகைய முடிவு தற்போது இல்லை என்று உறுதிப்படுத்தினார்.

மேலும் கடந்த வருடம் தனது வயிற்றில் அறுவை சிகிச்சை செய்த மருத்துவர்கள், தனது வயிற்றில் புற்று நோய்க்கிருமிகள் இருப்பதாக சொன்னார்கள் என்றும் தனக்கு புற்று நோய் உ ள் ள து என்றும் வலம் வரும் வதந்தியிலும் உண்மையில்லை என்று மறுத்துள்ளார், மேலும் அந்த மருத்துவர்கள் அப்படி எதுவும் தன்னிடம் கூறவும் இல்லை என்று திருத்தந்தை கூறியதோடு, அதை தன் சிரிப்பால் கடந்து சென்றார்.

அமெரிக்க உச்ச நீதி மன்றம், கருக்கலைப்பு பற்றி கூறிய கருத்திற்கு மாறான கருத்தை திருத்தந்தை வெளிப்படுத்தி, தனது அதிர்ப்தியையும், கண்டனத்தையும் மீண்டும் தெரிவித்துள்ளார்.

கருப்பலைப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் அரசியல்வாதிகளுக்கு, திருவிருந்தில் பங்குகெடுக்கும் உரிமையை மறுக்க வேண்டும் என்று கூறிய அமெரிக்க ஆயரின் கருத்திற்கு தான் உடன்படவில்லை என்றார் திருத்தந்தை.

இந்த மாதத்தின் இறுதியில் உக்ரைனுக்கு செல்லவிருப்பதாகவும், அதற்கு முன் ரஷ்யாவிற்கும் சென்று அமைதிக்கான வழிகளை ஊக்கப்படுத்தவும் இருப்பதாகவும் அவர் தன் விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.

மேலும் சமீபத்தில் தனது முழங்காலில் ஏற்பட்ட உடைப்பையும், அதனால் ஏற்பட்ட அசௌகரியங்களைப் பற்றி அவர் வெளிப்படையாகக் கூறி, அது சிறிது சிறிதாக குணமாகி வருகின்றது என்றார்.

நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்காக, ஞானஒலி வாசகர்கள் அனைவரும் செபிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வருகின்ற 17.7.2022 - பொதுக்கால 16ம் வார ஞாயிறு திருப்பலியில் அவருக்காக நாம் அனைவரும் இந்த சிறப்பான கருத்திற்காக மன்றாடுவோம். நன்றி.

# இந்த வார விவிலிய வாசகங்கள்



## பொதுக்காலத்தின் 16–ம் ஞாயிறு

**17.7.2022–16ம் ஞாயிறு**
தொடக்க நூல் 18/1–10
கொலோசையர் 1/24–28
லூக்கா 10/38–42

**18.7.2022–திங்கள்**
மீக்கா 6/1–46–8
மத்தேயு 12/38–42

**19.7.2022–செவ்வாய்**
மீக்கா 7/14–15, 18–20
மத்தேயு 12/46–50

**20.7.2022–புதன்**
புனித.அல்போலினாரிஸ்
எரேமியா 1/1, 4–10
மத்தேயு 13/1–9

**21.7.2022–வியாழன்**
பிரிந்திசி புனித.லாரன்ஸ்
எரேமியா 3/1–4
யோவான் 20/11–18

**22.7.2022–வெள்ளி**
புனித.மதலேன் மரியா–விழா
திருத்தூதர் பணிகள்–3/1–4
யோவான் 20/1, 11–18

**23.7.2022–சனி**
புனித.பிரிஜிட்
எரேமியா 7/1–11
மத்தேயு 13/24–30

“We are the
Bibles
the world is
reading;
we are the
creeds
the world is
needing;
we are the
sermons
the world is
heeding.”
-Billy Graham



# குறள் வழங்கும் சமூக நெறி

## பாயிரம்

## கடவுள் வாழ்த்து

சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன் FSPM**

**குறள்:2**

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

**குறள் விளக்கம்:**

தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளை தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?

**சிந்தனை**

கடவுள் என்பது ஒரு நம்பிக்கை. நம்பினால் கடவுள்: நம்பாவிடில் வெறும் கல் என்ற வார்த்தைகள் இதனை உறுதிபடுத்துகின்றன. நாத்திகர் மற்றும் ஆத்திகர் மத்தியில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் நம்பிக்கையில் மாறுபாடுகள் அமைந்தாலும் ஒருவர் ஒருவருடன் நல்ல நட்பு பாராட்ட முடியும். ஒருவர் ஒருவரது நம்பிக்கையை மதிக்க வண்டும்.

அன்றைய மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசுவிடம் நீங்கள் தீவிர கொள்கைப் பிடிப்பு மிக்க ஒரு கம்யூனிசவாதி, அன்னை தெரசாவோ ஒரு தீவிர ஆன்மீகவாதி, உங்கள் இருவருக்கும் இடையே எப்படி நட்பு மலர்ந்தது? என்று கேட்டார்கள். சிரித்துக் கொண்டே அவர் சொன்ன பதில்: நாங்கள் இருவருமே ஏழைகளை நேசிப்பவர்கள் அதனால்தான் என்றார். மேலும் எனது மார்க்சியக் கொள்கைகளைத் தடுமாற வைக்கிறார் அன்னை தெரசா! ஏனெனில் இறைவனின் நன்மைத்தனத்தின் மீது நம்பிக்கை வைக்க அவர் என்னைத் தூண்டுகிறார் என்று சதுர்வேதி என்பவர் ஜோதிபாசு சொன்னதாக 'ஏழைகளின் மெசியா' என்ற புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது.

கடவுள் அன்பாயிருக்கிறார் என அனைத்து மதங்களும் போதிக்கின்றன. அதனால் அன்பை கடவுள் எனலாம். எனவே அன்பினால் உந்தப்பட்டு மனுக்குலத்திற்கு ஆற்றும் பணிகளை பிறரன்புச் செயல்கள் என்கிறோம். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்கிறோம். இதிலிருந்து கடவுள் என்பவர் எட்டாத தொலைவில், காணமுடியாத வகையில் இருப்பவர் அல்ல. நமது வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் உள்ள நன்மைத்தனத்தின் வடிவமே அவர். கற்றுத்தெளிந்தோரும் பாமரரும் இந்த மறைபொருளை எளிதில் அறிந்து கொள்ள முடியும். நம்பிக்கை கண் கொண்டு மட்டுமே கடவுளை நோக்க முடியும்.

மாவீரன் அலெக்சாந்தர் மற்றும் மாமன்னர் சார்லிமேன் போன்ற நாங்கள் படைபலத்தால் தான் பேரரசுகளை நிறுவினோம். ஆனால் அளவற்ற தம் அன்பால் ஆட்சிப்பீடம் அமைத்தவர் இயேசு கிறிஸ்து. அவருக்காக இரத்தம் சிந்தவும் இறப்பைத் தழுவவும் இன்றும் முன்வர உள்ளனர் பல்லாயிரம் மக்கள் என்றான் பிரான்சின் பேரரசன் நெப்போலியன் பொனபார்ட் (1769-1821)

ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம் என்று நீதிமொழிகள் இயல் 1 இறைவார்த்தை 7 கூறுகிறது.

இறையச்சம் பாவச் செயல்களை தவிர்த்து நல்வாழ்வு வாழ உறுதுணையாயிருக்கும். உண்மையான இறையடியார் பாவத்தில் வெகுநாள் வாழ முடியாது. தீமையை தொடர்ந்து செய்ய அவர் மனம் ஒப்பாது, உறுத்திக் கொண்டே இருக்கும். நன்மையே உருவான இறைவனுக்கு உகந்தது எதுவோ அதுவே அவரில் குடிகொள்ளும். தீமைக்கு அங்கு இடமில்லை. ஒளியாம் இறைவன் அருகில் இருள் நிற்க இயலாது. இத்தகைய மனநிலையை தரும் இறையச்சமே ஞானத்தின் தொடக்கம். எனவே கற்றுத் தேர்ந்த ஞானிகள் தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனில் நம்பிக்கை இல்லாமல் இருப்பாரானால் அவர் கற்ற கல்வியினால் பயனில்லை என்கிறார் வள்ளுவர்.

மனிதனுக்கு உறுதியூட்டும் இறைநம்பிக்கை நல்லது. ஆனால் ஒருவர் தனது இறை நம்பிக்கையை உயர்த்தி பிடித்துக்கொண்டு பிறரது நம்பிக்கையை தாழ நினைப்பது தவறு. நமது சிந்தனையில் கடவுளை சிக்க வைப்பது சாத்தியமல்ல. இறைவனை தேடி தேடி அலைபவர்கள் பலர் உண்டு. அதில் முக்தியும் கண்டவருண்டு. கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்ற கேள்வி எழாத மனித மனமும் உண்டோ? கடவுள் இருந்தால் நன்றாக இருக்கும் என்பவர் பலர். நன்மை உருவாக அன்பு வடிவாக இறைவனை காண்போம்.




# திருவிவிலியத்திலிருந்து எடுத்தாளப்பட்ட

## தித்திக்கும் திருக்குறள்

**அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை நின்றாரின் பேதையார் இல்.**

**அதிகாரம் 15**

**பிறனில் விழையாமை**

**குறள் எண் 142**

**பொருள்:**

நீதி, நெறி, ஒழுக்கம் முதலியவற்றை ஒதுக்கிவிட்ட கடையர் எல்லாரினும் மிகுந்த கடையனாவன். யாவன் என்றால் பிறருடைய மனைவியரை விரும்பும் பேதையே ஆவான். அப்பேதை அச்சத்தால் தான் கருதிய இன்பமும் இழக்கிறான் என்பதும் வலியுறுத்தப்பட்டது.

பிள்ளாய்! உன் தந்தையின் கட்டளையைக் கடைப்பிடி; தாயின் அறிவுரையைப் புறக்கணியாதே.

அவற்றை எப்போதும் உன் இதயத்தில் இருத்திவை; உன் கழுத்துக்கு மாலையென அணிந்து கொள்.

நீ நடந்து செல்லும்போது அவை உனக்கு வழிகாட்டும்; நீ படுத்திருக்கும்போது அவை உன்னைக் காவல் காக்கும்; விழித்திருக்கும்போது உன்னுடன் உரையாடும்.

கட்டளை என்பது ஒரு விளக்கு; அறவுரை என்பது ஒளி; கண்டித்தலும் தண்டித்தலும் நல்வாழ்வுக்கு வழி.

அவை உன்னை விலைமகளிடமிருந்து, தேனொழுகப் பேசும் பரத்தையிடமிருந்து விலகியிருக்கச் செய்யும்.

உன் உள்ளத்தால் அவளது அழகை இச்சியாதே; அவள் கண்ணடித்தால் மயங்கிவிடாதே.

விலைமகளின் விலை ஒரு வேளைச் சோறுதான்; ஆனால், பிறன் மனையாளோ உயிரையே வேட்டையாடி விடுவாள். ஒருவன் தன் மடியில் நெருப்பை வைத்திருந்தால், அவனது ஆடை எரிந்து போகாமலிருக்குமா?

ஒருவன் தழல்மீது நடந்து சென்றால், அவன் கால் வெந்து போகாமலிருக்குமா?

பிறன்மனை நயப்பவன் செயலும் இத்தகையதே; அவளைத் தொடும் எவனும் தண்டனைக்குத் தப்பமாட்டான்.

திருடன் தன் பசியைத் தீர்க்கத் திருடினால், அவனை மக்கள் பெருங்குற்றவாளியெனக் கருதாதிருக்கலாம்.

ஆனால், அவன் பிடிபடும்போது ஏழு மடங்காகத் திருப்பிக்கொடுக்க வேண்டும்; தன் குடும்பச் சொத்து முழுவதையுமே கொடுத்துவிட நேரிடும்.

கற்புநெறி தவறுகிறவன் மதிகேடன். அவ்வாறு செய்வோன் தன்னையே அழித்துக்கொள்கின்றான்.

அவன் நைய நொறுக்கப்படுவான், பழிக்கப்படுவான்; அவனது இழிவு ஒருபோதும் மறையாது.

ஏனெனில், தன் மனைவி தனக்கே உரியவள் என்னும் உணர்ச்சி ஒரு கணவனிடம் சினவெறியை உண்டாக்கும்; பழி தீர்த்துக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கும் நாளில், அவன் இரக்கம் காட்டமாட்டான். சரியீடு எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டான்; எவ்வளவு பொருள் கொடுத்தாலும் ‘அவன் சினம் தணியாது.

என் பிள்ளையே, என் வார்த்தைகளை மனத்தில் இருத்து; என் கட்டளைகளைச் செல்வமெனப் போற்று. என் கட்டளைகளைக் கடைப்பிடி, நீ வாழ்வடைவாய்; என் அறிவுரையை உன் கண்மனிப்போல் காத்துக்கொள்வாய்.

அவற்றை உன் விரல்களில் அணியாகப் ப+ண்டு கொள்; உன் இதயப் பலகையில் பொறித்துவை. ஞானத்தை உன்

சகோதரி என்று சொல்; உணர்வை உன் தோழியாகக் கொள். அப்பொழுது நீ விலைமகளிடமிருந்து தப்புவாய்; தேனொழுகப் பேசும் பரத்தையிடமிருந்து காப்பாற்றப்படுவாய்.

ஒரு நாள் நான் என் வீட்டின் பலகணியருகில் நின்றுகொண்டு, பின்னல் தட்டி வழியாகப் பார்த்தபோது,

பேதைகளிடையே ஓர் இளைஞனைக் கண்டேன்; மதிகோடான அவனை இளைஞரிடையே பார்த்தேன்.

அவன் தெரு வழியாக நடந்துபோய், அதன் கோடியில் அவள் வீட்டை நோக்கிச் சென்றான்.

அது மாலை நேரம், பொழுது மயங்கும் வேளை; அந்த இரவிலே, இருட்டும் நேரத்திலே அங்கே ஒரு பெண் அவனைக் காண வந்தாள். அவள் விலைமகளைப் போல உடுத்தி, வஞ்சக நெஞ்சினளாய் வந்தாள்.

அவள் வெளிப் பகட்டு மிகுந்தவள்; வெட்கத்தை ஒழித்தவள்; வீட்டில் அவளது கால் தங்காது.

அவள் நடுத்தெருவிலும் நிற்பாள்; முச்சந்தியிலும் நிற்பாள்; மூலைமுடுக்குகளிலும் பதுங்கியிருப்பாள். அவள் அவனைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு, நாணமிலாத் துணிவுடன் அவனைப் பார்த்து, நான் பலிகளைப் படைக்க வேண்டியிருந்தது: இன்று நான் என் பொருத்தனைகளை நிறைவேற்றிவிட்டேன். அதனாலேதான் உன்னைக் காணவந்தேன்; உன்னை ஆவலோடு தேடினேன்; கண்டுகொண்டேன்.

என் மஞ்சத்தை மெத்தையிட்டு அழகு செய்திருக்கின்றேன்; எகிப்து நாட்டு வண்ணக் கம்பளம் விரித்திருக்கின்றேன். வெள்ளைப்போளம், சந்தனம், இலவங்கக் கலவையிட்டு, என் படுக்கையை மணம் கமழச் செய்திருக்கின்றேன்.

நீ வா; விடியற்காலம் வரையில் இன்பத்தில் மூழ்கியிருப்போம்; இரவு முழுவதும் காதலாட்டத்தில் களித்திருப்போம். என் கணவன் வீட்டில் இல்லை. நெடுந்தொலைப் பயணம் செய்யப் புறப்பட்டுப் போய் விட்டான்.

அவன் பை நிறையப் பணம் கொண்டுபோயிருக்கின்றான்; முழுநிலா நாள்வரையில் திரும்பிவர மாட்டான்‘ என்று சொன்னாள். இவ்வாறு பல இனிய சொற்களால் அவனை அவள் இணங்கச் செய்தாள்; நயமாகப் பேசி அவனை மயக்கிவிட்டாள்.

உடனே அவனும் உணர்வு மழுங்கினவனாய் அவள் பின்னே சென்றான்; வெட்டுவதற்காக இழுத்துச் செல்லப்படும் காளைமாட்டைப் போலவும், வலையில் சிக்கிக் கொள்ளப் போகும் கலைமானைப் போலவும்,

கண்ணியில் விழப்போகும் பறவையைப் போலவும் சென்றான். ஓர் அம்பு அவன் நெஞ்சில் ஊடுருவிப் பாயும் வரையில் தன் உயிர் அழிக்கப்படும் என்பதை அறியாமலே சென்றான்.

ஆகையால் பிள்ளைகளே! எனக்குச் செவிகொடுங்கள்; நான் சொல்வதைக் கவனியுங்கள்.

உங்கள் மனத்தை அவள் வழிகளில் செல்லவிடாதீர்கள்; மயக்கங்கொண்டு அவள் பாதைகளில் நடவாதீர்கள்.

அவள் பலரை குத்தி வீழ்த்தியிருக்கின்றாள்; வலிமை வாய்ந்தோரையும் அவள் கொன்றிருக்கின்றாள்.

அவள் வீடு பாதாளத்திற்குச் செல்லும் வழி; சாவுக்கு இட்டுச் செல்லும் பாதை.

இவையனைத்திற்கும் முடிவுரையாக ஒன்று கூறுகிறேன்; கடவுளுக்கு அஞ்சி நட; அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படி. இதற்காகவே மனிதர் படைக்கப்பட்டனர்.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும், மறைவான செயலுக்குங்கூட, அது நல்லதோ தீயதோ எதுவாயினும், அனைத்திற்கும் கடவுளே தீர்ப்பு வழங்குவார்.

(சபை உரையாளர் 12:13,14)

எனும் இக்கூற்றுகளின்படி, நாம் இறைவனிடம் தஞ்சம் புகுவோம்.

இயேசுவுக்கே மகிமை

**லீமா விக்டோரியா.**

# திருவிவிலியத்தோடு திருக்குறளும் பழப்போம்...